


# "வாசிப்பையும் வரலாறையும் கற்பித்த இயக்கம் திராவிட இயக்கம்!"

**கழக இளைஞர் அணி நடத்திய 'தி.மு.க 75 அறிவுத்திருவிழா' நிகழ்ச்சியின் ஒருபகுதியாக நடைபெற்ற 'இருவண்ணக்கொடிக்கு வயது 75' கருத்தரங்கத்தின் இரண்டாம் அமர்வில் 'அச்சு முதல் காட்சி ஊடகங்கள் வரை... திராவிடம்' என்ற தலைப்பில் ஊடகவியலாளர் ஜீவ சகாப்தன் அவர்கள் ஆற்றிய உரை :**

"இளைஞர் அணிச் செயலாளராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு சமூகநீதி, சமத்துவம், மாநில சுயாட்சி என்று கருத்தியல்ரீதியில் இளைஞர்களைப் பயிற்றுவிக்கிறார். வெறும் கட்சியை வளர்க்கும் பணிகள் மட்டுமல்ல, கொள்கை, சித்தாந்தரீதியாக இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்பதற்காகப் பல நிகழ்ச்சிகளை நடத்துகிறார் அதனுடைய ஒரு துளிதான் இந்த நிகழ்வும். அதில் பங்கேற்கிறோம் என்பது எனக்கு உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

ஒருகாலகட்டத்தில் ஊடகங்கள் நம்மிடம் இல்லை. ஊடகங்கள் நமக்கானதாகவும் இல்லை; நம்முடைய ஆட்கள் நடத்துவதாகவும் இல்லை; நம் ஆட்கள் பணிபுரிவதாகவும் இல்லை. அப்படிப்பட்ட சூழலில்தான் 'குடி அரசு', 'விடுதலை' போன்ற இதழ்களைத் தந்தை பெரியார் தொடங்கினார். 'குடி அரசு' முடங்கினால் 'புரட்சி' இதழைத் தொடங்கினார். குடியரசு, அதாவது மக்களாட்சி முடங்கினால் புரட்சி வருவதுதானே இயல்பு!



**ஜீவ சகாப்தன்**
**ஊடகவியலாளர்**

பிரிட்டிஷாராக இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும் சரி திராவிட இயக்க இதழ்களுக்கும் புத்தகங்களுக்கும் நெருக்கடிகள் வந்தன. அண்ணாவின் 'ஆரியமாயை' நூல் தடை செய்யப்பட்டது. 'பெரியாரின் பொன்மொழிகள்' நூல் தடை செய்யப்பட்டது. இவையெல்லாம் காங்கிரஸ் ஆட்சியில். பொதுவாக பெரியார் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தார் என்று அவதூறு செய்வார்கள். ஆனால் அந்த பிரிட்டிஷ் ஆட்சியில்தான் 'குடி அரசு' இதழ் தலையங்கத்துக்கு தடை விதிக்கப்பட்டது. பெரியாரின் தங்கை கண்ணம்மாள் கைது செய்யப்பட்டார். பெரியாரின் அண்ணன் ஈ. வெ.கிருஷ்ணசாமி மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசை எதிர்த்து எழுதியதற்காக, பொதுவுடைமை பிரச்சாரம் செய்ததற்காக 'குடி அரசு' இதழ் நெருக்கடியைச் சந்தித்தது.

அப்பட்டிப்பட்ட பெரியாரைத்தான் 'பிரிட்டிஷ் ஆதரவாளர்' என்று அவதூறு செய்கிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாக இருந்தாலும் காமராசர் ஆட்சியாக இருந்தாலும் கலைஞர் ஆட்சியாக இருந்தாலும் பெரியார் அந்த அரசுகளை ஆதரித்ததற்கு ஒரே காரணம் பார்ப்பனர் அல்லாத பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான நலன் என்பதற்காகத்தான்.

திராவிட இயக்கத் தலைவர்கள் இயல்பாகவே பத்திரிகை ஆசிரியர்களாக இருந்தார்கள். பத்திரிகை படிப்பவர்களாக மட்டுமில்ல, 'முரசொலி', 'மறவன் முரசு', 'தென்றல்' என்று பத்திரிகை நடத்துபவர்களாகவும் இருந்தார்கள். 1967ல் அமைச்சர்களக இருந்தவர்களில் பலபேர் மூன்று, நான்கு பத்திரிகைகளின் ஆசிரியராகவும் இருந்தார்கள். படிக்க வேண்டும், எழுத வேண்டும், பத்திரிகை நடத்த வேண்டும் என்பதை அடிப்படையான பணியாகக் கொண்ட இயக்கமாக இது இருந்திருக்கிறது.

இன்று நாம் வேறு ஒரு காலகட்டத்திற்கு வந்துவிட்டோம். இப்போது புத்தக வாசிப்பு, பத்திரிகை வாசிப்பு என்பது குறைந்துவிட்டது, அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மை இது. ஒருகாலத்தில் நாம் படிக்கக்கூடாது என்ற தடை இருந்தது. இன்றோ நம் இளைஞர்களே வாசிப்பதில்லை, படிப்பதில்லை. மீண்டும் பழைய காலகட்டத்தை நோக்கி நகர்கிறோமோ என்று தோன்றுகிறது. வாசிப்பைக் கைவிட்டதால்தான் ஒரு நடிகருக்காக 9 மணி நேரம் காத்திருக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. 9 மணி நேரம் ஒருவரால் படிக்காமல், சிந்திக்காமல், எந்த வேலையும் பார்க்காமல் ஒரு நடிகருக்காக நிற்க முடிகிறது என்றால் கண்டிப்பாக அவரை படிப்பறிவு இல்லாதவர் என்றுதான் சொல்ல முடியும்.

அறிஞர் அண்ணாவுக்கு அறுவைசிகிச்சை நடக்கும் நேரத்தில்கூட அவர் புத்தகம் படித்துக்கொண்டிருந்தார். அவரைப் போன்றவர்கள்தான் வழிகாட்டும் தலைவர்களாக இருக்க முடியுமே தவிர, 'எனக்காக 9 மணி நேரம் குழந்தைகளுடன் வெயிலில் காத்திருங்கள்' என்று சொல்பவர்கள் எப்படி நல்ல தலைவர்களாக, வழிகாட்டிகளாக இருக்க முடியும்?. திராவிட இயக்கத்தின் சாதனைகளைப் பற்றிப் பேசும்போது இந்த அவலத்தைப் பற்றியும் பேச வேண்டியிருக்கிறது. ஏனெனில் இங்கே இருக்கும் இளைஞர்கள் 'திராவிடநாடு', 'ஹோம்லேண்ட்', 'விடுதலை' படித்து வளர்ந்தவர்களின் வாரிசுகள். இப்படிப்பட்ட இளைஞர்கள் இருக்கும்போதுதான் அரசியல் உணர்வு இல்லாத இளைஞர்களும் இருக்கிறார்கள் என்பதை வேதனையுடன் சுட்டிக்காட்டுகிறேன். பெரியார் காலத்தை விடுங்கள். 1960களில் அண்ணா அவர்கள் சொல்கிறார், 'பார்த்தசாரதி அய்யங்கார் நடத்துகிற பத்திரிக்கையை நாராயணசாமி சாஸ்திரி படிச்சி, சுப்பிரமணிய அய்யர் கேட்டு, அதை யாரோ ஒரு வேணு சாஸ்திரி கிட்ட நல்லா இருக்கு' என்று பாராட்டுகிறாராம். இப்படிப்பட்ட சூழலில்தான் திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பத்திரிகைகளைத் தொடங்கி நடத்தினார்கள். பத்திரிகைகளை நடத்தியவர்களும் படித்தவர்களும் சட்டமன்றத்துக்குச் சென்றார்கள்; அமைச்சர்கள் ஆனார்கள்.ஒரு இயக்கம் ஆட்சியைப் பிடிப்பது, அதிகாரத்தை பிடிப்பது என்பதல்ல முக்கியம், அது யாரைக் கொண்டு வந்தது, படித்தவர்களை, பத்திரிகையாளர்களை, ஊடகவியலாளர்களை, சிந்தனையாளர்களைக் கொண்டு வந்தது என்பதுதான் முக்கியம்.

அண்ணாவும் கலைஞரும் எழுதிய கடிதங்களையும் 'நெஞ்சுக்கு நீதி'யையும் படித்தாலே சர்வதேச அரசியலைத் தெரிந்துகொள்ளலாம். மாவோவின் நடைபயணம் முதல் சே குவேரா, பிடல் காஸ்ட்ரோ, பாலஸ்தீனப் பிரச்சினை, யாசர் அராபத் வரை பல்வேறு சர்வதேசப்பிரச்சினைகள், சர்வதேச தலைவர்கள் குறித்து கலைஞர் எழுதியிருப்பார். ஈழப்பிரச்சினையைக் குறித்து எழுதும்போது அதை பாலஸ்தீனப் பிரச்சினையுடன் ஒப்பிட்டு எழுதியிருப்பார். இப்படி தன் தொண்டர்களுக்குத் தொடர்ந்து கற்பித்து வந்தவர் கலைஞர்.

பத்திரிகைகள், திரைப்படங்கள், நாடகங்கள் என்று எல்லா ஊடகங்களின் வழியாகவும் சமூகநீதியையும் சமத்துவத்தையும் பேசிய இயக்கம் திராவிட இயக்கம். 'நமஸ்காரம்' என்பதை வணக்கமாக மாற்றிய இயக்கம் நம் திராவிட இயக்கம். தோளில் துண்டு போடக்கூடாது என்ற சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகத் தோளில் துண்டு அணிந்த இயக்கம் நம் திராவிட இயக்கம். இப்போது ஏராளமான தலித் சினிமாக்கள் வருவதைப் பார்க்கிறோம். அவை வரவேற்கத்தக்கவை. அதேநேரம் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தி.மு.கவைப் பற்றி ஒரு திரைப்படத்தில் பாடியிருப்பார் 'தீனா மூனா கானா' என்று.'திராவிட முன்னேற்றக்கழகம்' என்று பாடினால் தணிக்கை செய்துவிடுவார்கள் என்று 'திருக்குறள் முன்னேற்றக்கழகம்' என்று பாடியிருப்பார். அதில் சில வரிகள் வரும்...

'கருப்பு சிவப்பு என்ற பேதத்தை நீக்கும் — தலைக் கனத்தைக் குறைத்து நல்லதன்மையை யுண்டாக்கும் கள்ளர் மறவரோடு பள்ளுப் பறைகளென உள்ள பேதங்களை ஒழித்துக் காட்டும் எங்கள் தீனா மூனா கானா' என்பவை அந்த வரிகள்.

சாதி பேதத்தை ஒழிப்பது, ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்குரலை ஒலிப்பது ஆகியவற்றை 60களில் செய்து காட்டிய இயக்கம் திராவிட இயக்கம். எனவே இன்றைய தலித் சினிமாக்களுக்கும் முன்னோடியாக திராவிட சினிமாக்கள் இருந்தன என்று சொல்லலாம்.

இப்படி தொடர்ச்சியாகத் தன் கொள்கைகளை மீண்டும் மீண்டும், எந்தெந்த ஊடகங்கள் எல்லாம் கையில் கிடைக்கின்றனவோ அந்தந்த ஊடகங்களில் எல்லாம் பேசிக்கொண்டிருந்த இயக்கம் திராவிட இயக்கம். வெறுமனே பகுத்தறிவு, சமூகநீதியைப் பற்றி மட்டும் திராவிட இயக்கம் பேசவில்லை. பொதுவுடைமையையும் தங்கள் எழுத்துகளில் வலியுறுத்தினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டபோது கம்யூனிஸ்ட்களுக்கு ஆதரவாக எழுதியவர்கள் திராவிட இயக்கத்தவர்.

ஆனால் 90களுக்குப் பிறகு உலகமயமாக்கலுக்குப் பிறகு சொகுசாக வாழும் ஒரு தலைமுறை உருவாகிவிட்டது, அவர்களுக்கு நம் வரலாறு தெரியவில்லை; நம் போராட்டங்கள் தெரியவில்லை; நம் முன்னோர்களின் தியாகங்கள் தெரியவில்லை. ஏன் இட ஒதுக்கீடு, எதற்காக இந்தியைத் திணிப்பதை எதிர்க்கிறோம் என்று தெரியவில்லை. ஆனால் வட இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். இப்போது இந்தியா முழுவதும் திராவிட இயக்கக் கொள்கைகள் விவாதிக்கப்படுகின்றன. நம் தமிழ் இளைஞர்களிடமும் நம் கொள்கைகளைக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு நாம் எல்லா வகையான ஊடகங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்." ●



## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**'திராவிடர் தளம்' அமைப்பை நடத்திவரும் பெரியாரிய செயற்பாட்டாளர் அதி அசுரன் அவர்கள் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' நூல் குறித்து தன் முகநூலில் எழுதியிருக்கும் பதிவில் இருந்து...**

'எங்கள் வரலாற்றை எழுத நீங்கள் யார்? சமுதாயத்தின் வரலாறுகளை, எத்தனை காலம் தான் நீங்களே பதிவு செய்து கொண்டிருப்பீர்கள்? எத்தனை காலம் தான் உங்களது பதிவுகளை எங்களது தலைமுறைகளுக்கான பாடமாகவும் வைப்பீர்கள்? எல்லாவற்றுக்கும் முடிவுரை எழுதுகிறது தி.மு.க. இளைஞரணியும் முத்தமிழறிஞர் பதிப்பகமும்!

தமிழ்நாட்டின் 75 ஆண்டுகால ஜாதி ஒழிப்பு வரலாறு, பெண் விடுதலை வரலாறு, பொருளாதார விடுதலை, மாநிலத் தன்னாட்சி வரலாறுகளின் தொகுப்பாக மலர்ந்துள்ளது "காலத்தின் நிறம் கருப்பு, சிவப்பு". இந்த ஆவணத்தில் 'ஜாதி - ஆணாதிக்கத்தின் மீது தி.மு.க.வின் துல்லியத் தாக்குதல்: சுயமரியாதைத் திருமணச் சட்டம்" என்ற தலைப்பில் எனது கட்டுரை வெளியாகி உள்ளது. வாய்ப்பளித்த இளைஞரணி - அன்பகம் தோழர்களுக்கும் மானமிகு தோழர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மிக்க நன்றி.

இந்நூலுக்குத் தமிழ்நாடு முழுவதும் மாவட்டந் தோறும் அறிமுக விழாக்களை நடத்த வேண்டும்.

புதுடெல்லி, மும்பை மற்றும் இந்தியா முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் இந்த ஆவணத்தின் மீது விவாத அரங்குகளை நடத்த வேண்டும்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த ஆவணத்தின் வெளியீட்டு விழாவில் தெரிவித்ததைப் போல, இந்நூலின் கட்டுரைகள் சிறு சிறு வீடியோக்களாக வெளியிடப்பட வேண்டும்

என்ற மூன்று வேண்டுகோள்களை தி.மு.க. இளைஞரணி-மாணவரணி தோழர்களுக்கு திராவிடர் தளம் SFD தோழர்கள் சார்பில் முன்வைக்கிறேன்.'